கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

2026ம் வருடம் பிப்ரவரி மாதம் 05ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.6/2026
இன்
அசல் வழக்கு எண்.439/2010
* * * *

D.S.வேல்முருகன் ... மனுதாரர்/1ம் பிரதிவாதி

/எதிர்/

1. C.போஜன் (இறப்பு) ... 1ம் வாதி

2. R.பரிமளா
3. B.ஹரிஷ் ராம் ... 2,3 எதிர்மனுதாரர்கள்/2,3 வாதிகள்

4. பர்வதவர்த்தினி
5. சித்ரா ... 4,5 எதிர்மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனுவானது இன்று 05.02.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.இராமபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 வாதிகள் தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராகவன் அவர்கள் ஆஜராகியும், 5ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.இராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் வாதி அசல் வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் இறந்துவிட்ட நிலையிலும், 4ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியானவர் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருந்து வந்த இந்நிர் மனுவில், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு ஆவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது அசல் வழக்கினை நிராகரிக்க வேண்டி மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கட்டளை 7 விதி 11 மற்றும் 151 சிபிசி பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் இந்நிர் இடைநிலை மனுவினை நிரூபணம் செய்யும்பொருட்டு எவ்வித சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

அசல் வழக்கானது கடந்த 2010ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருவதை கருத்தில்கொண்டும், பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக அசல் வழக்கானது நிலுவையில் உள்ள நிலையிலும், எதிர்மனுதாரர்கள் தரப்பு வாய்மொழியான ஆட்சேபனை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>2) தீர்வு</u>:-**

2.1) மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்று பரிசீலனை செய்கையில், 1ம் வாதியானவர், இந்நிர் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 15.02.2010ம் தேதியன்று தாவாச்சொத்தின் வாதியின் அனுபவத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 1ம் வாதி இறந்துவிட்ட நிலையில், மேற்படி அசல் வழக்கினை நிராகரிக்கவேண்டி இம்மனுவானது மனுதாரர்/1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) மேலும், வாதியின் அசல் வழக்கினை தாக்கல் செய்த 1ம் வாதியானவர் இறந்துவிட்ட நிலையில், 1ம் வாதி கோரியுள்ள பரிகாரம்

பாதிக்கப்பட்டுள்ளதாலும், மேற்படி 1ம் வாதி இறந்த நிலையில், அவருடைய வாரிசுகளான 2,3 எதிர்மனுதாரர்கள்/2,3 வாதிகள், அசல் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி அசல் வழக்கின் வழக்குமூலமானது மேற்படி 2,3 எதிர்மனுதாரர்கள்/2,3 வாதிகளை பொறுத்து எழாது என்ற நிலையிலும், அசல் வழக்கானது கட்டளை 7 விதி 11ன் கீழ் நிலைநிற்கத்தக்கதல்ல என்று மனுதாரர்/1ம் பிரதிவாதியின் தரப்பில் வாதிடப்பட்டது.

2.3) இந்நிலையில், அசல் வழக்கானது முழு விசாரணைக்கு முன்பே நிராகரிக்கப்படவேண்டியதா? என்று பரிசீலிக்கையில், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 வாதிகளின் தந்தையான 1ம் வாதி இறந்துவிட்ட நிலையில், 1ம் வாதியானவர் தாக்கல் செய்த வழக்கிற்கான வழக்குமூலமானது இல்லாமல் போய்விட்டதாக மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு வாதமானது சட்டப்படியாக ஏற்கத்தக்கதாக இல்லை. 1ம் வாதி இறந்தபோதிலும், அவருடைய சட்டப்படியான வாரிசுகளான 2,3 எதிர்மனுதாரர்கள்/2,3 வாதிகளின் உரிமையானது சட்டப்படியாக தொடரவே செய்யும். இந்நிலையில், வழக்குமூலமானது அசல் வழக்கில் இல்லை என்ற மனுதாரர்/1ம் பிரதிவாதியின் கூற்றானது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல இல்லை.

2.4) மேலும், அசல் வழக்கானது இருதரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, பி.வா.சா.1ஐ வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பால் அசல் வழக்கினை காலம் கடத்துவிதமாகவே இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது. எனவே, அசல் வழக்கினை காலம் கடத்தும்விதமாகவும், சட்டப்படியான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை குறிப்பிடாமல் மனுவினை தாக்கல் செய்துள்ளதால், இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு மனுதாரர்/1ம் பிரதிவாதியின் இம்மனுவானது நிராகரிக்கப்பட வேண்டியது என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/1ம் பிரதிவாதியின் மனுவானது எதிர்மனுதாரர் தரப்பு செலவுத்தொகையுடன் நிராகரிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.05 17:05:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**இணைப்பு:-**

**1. மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:-** இல்லை

**2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.05 17:05:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.06/2026
இன்
அசல் வழக்கு எண்.439/2010
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 05.02.2026